பக்கங்கள்:-எட்டு
Registered as a News paper in Sri Lanka
விலை ரூபா: 6.00

# வலம்புரி
VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 01 | வியாழக்கிழமை (15-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 147

# யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்ட சார்ஸ் (?) நோயாளி மரணமானார்!

(யாழ்ப்பாணம்)

**சார்ஸ் நோய்க்கான அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இளம் யுவதி நேற்றுக் காலை மரணமானார்.**

**சாவகச்சேரியைச் சேர்ந்த சிறீதரன் ஜமுனா (வயது 27) என்பவரே மரணமானவராவார்.**

மூன்று நாட்கள் நீடித்த கடும் காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இவருக்கு சிகச்சை அளித்து வந்த டாக்டர்கள் இனந்தெரியாத சுவாசத் தொற்று ஏற்பட்டிருப்பதைக் கண்டறிந் தனர்.

மேலும் சார்ஸ் நோய்க்கான அறி குறிகளான காய்ச்சல், சளி, சுவாசிப் பதில் சிரமம் என்பவற்றை பிரஸ் தாப நோயாளியிடம் அவதானித்த டாக்டர்கள் அவரை அதிதீவிர சிகிச் சைப் பிரிவுக்கு மாற்றினர். சுவாசிப் பதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக செயற்கை முறையில் சுவாசம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் எந்த வித சிக்சைகளும் பயனளிக்காத நிலையில் பிரஸ்தாப யுவதி நேற் றுக் காலை 9மணியளவில் மரண மானார்.

மரணமடைந்த பிரஸ்தாப யுவதி யின் சடலம் நேற்று இரவு 7.30மணி யளவில் உறவினர்களிடம் கையளிக் கப்பட்டது.

முன்னதாக யாழ். மாவட்டப் பதில் நீதிவான் சு. கந்தசாமி வைத் தியசாலைக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

(08ம் பக்கம் பார்க்க)

## மரணமான சார்ஸ் நோயாளியின் இரத்த மாதிரிகளை ஏற்க விமான அதிகாரிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

சார்ஸ் நோயினால் உயிரிழந்த தாகக் கருதப்படும் இளம் யுவதியின் இரத்தம் மற்றும் உடல் உள்ளுறுப் புக்கள் என்பன மருத்துவ பரிசோத னைக்காக விமானம் மூலம் கொழும் புக்கு அனுப்பிவைப்பதற்காக பலாலி விமான நிலையத்திற்கு எடுத் துச் செல்லப்பட்டபோதும் அவற்றை விமானத்தில் கொண்டு செல்வதற்கு விமான நிலைய அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

சார்ஸ் நோய் கண்டறிவதற்கான மருத்துவ வசதிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லாத நிலை யில் மரணமடைந்த யுவதியின் இரத் தம் மற்றும் உடல் உள்ளுறுப்புக்கள் சீல் வைக்கப்பட்டு மிகவும் பாதுகாப் பான முறையில் கொழும்புக்கு அனுப்பிவைக்க முயற்சித்தபோதும் அதனை விமான நிலையத்தில் அதிகாரிகள் பொறுப்பேற்க மறுத்த தால் மாதிரிகளை மீண்டும் யாழ்.

(08ம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்படிக்கையை விடுதலைப்புலிகள் மீறியுள்ளனர்

### கிறிஸ்ரினாவிடம் ஜனாதிபதி முறையீடு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வுடன் விடுதலைப்புலிகள் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை விடுதலைப்புலிகள் மீறி வந்துள் ளார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குற்றம் சாட்டி தெற் காசிய விவகாரங்களுக்கான அமெ ரிக்க இராஜாங்க அமைச்சரின் செய லாளர் கிறிஸ்ரினா றொக்காவிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார்.

ஜனாதிபதியால் கையளிக்கப்பட் டுள்ள அக் கடிதத்தில் அரசியல் எதிரிகள் மற்றும் உளவாளிகளைக் கொலை செய்தல் சிறுவர்களை இரா ணுவத்திற்கு திரட்டல் போன்ற பல தரப்பட்ட குற்றச் சாட்டுக்களை விடுதலைப்புலிகள் மீது ஜனாதிபதி சுமத்தியுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்முறையையும் தனிநாட் டுக் கோரிக்கையையும் கைவிடு தல் வேண்டும் என்பதிலும் மனித உரிமைகளைப் பேணவேண்டு மென்பதிலும் அமெரிக்கா எடுத் துள்ள உறுதிப்பாட்டையும் ஜனா திபதி சந்திரிகா அக் கடித்ததில் பாராட்டியுள்ளார். (வ)

# லொத்தர் சபையை ஒப்படைக்க முடியாது

## பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

**அபிவிருத்தி லொத்தர் சபையினைப் பொறுப்பேற்கும் தனது முடிவினை மாற்றவோ, மீள் பரிசீலனை செய்யவோ முடியாது. தனது முடிவு வர்த்தமானியில் வெளியிடப்படாவிட்டாலும் அது செல்லுபடியாகும் இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்கும் முடிவினை ஜனா திபதி மள்பரிசீலனை செய்ய வேண் டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதிக்கு எழு திய கடிதத்திற்கு ஜனாதிபதி அனுப் பிவைத்துள்ள பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பிரதமருக்கான பதில் கடிதம் நேற்று பிரதமர் அலு வலகத்திற்கு உத்தியோகபூர்வமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமார துங்கா பிரதமருக்கு அனுப்பிவைத் துள்ள பதில் கடிதத்தில் குறிப்பிட் டுள்ளதாவது:

இலங்கையின் அரசியல் சட்டத் தின் 44-வது பிரிவின் பிரகாரம், அமைச்சர்களை நியமனம் செய்வ திலும், அமைச்சுக்களின் பொறுப்புக் களை தீர்மானிப்பதிலும், அமைச்சர் களின் செயற்பாடுகளை தீர்மானிப்ப திலும், பிரதமரின் ஆலோசனையை பெறவேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லையென சந்திரிகா குமார துங்கா குறிப்பிட்டதுடன் இவைகள் யாவும் தனது அதிகாரத்திற்கு உட் பட்டவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்கும் தனது முடிவினை மாற்ற முடியாதெனவும், அதனை

(08ம் பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர் பிரபாவுடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச் சர் பீற்றசன் தமிழீழ விடுதலைப்புலி களின் தலைவர் வே. பிரபாகரனை இன்று காலை 10மணிக்கு கிளிநொச் சியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றசன் மற்றும் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகி யோரை விமான நிலையத்தில் வைத்து இலங்கை பிரதி வெளிவிவ கார அமைச்சர் லால் கமகே வர வேற்றார்.

பின்னர் நேற்றுக் மாலை எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக் ஷாவை சந்தித்துப் பேச்சு நடத்திய நோர்வே குழுவினர் இன்று காலை வன்னிக்குச் சென்று விடுதலைப்புலி களின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்துப் பேசவுள்ளனர். (ந-5)

## தேர்தலை எதிர்கொள்ள தேர்தல் திணைக்களம் தயார்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசிற் கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் காவிற்கும் இடையிலான அரசியல் முறுகல் நிலையை அடுத்து திடீர் பொதுத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்க ளம் சுறுசுறுப்பாக செய்து வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றமை தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடுவதற்கான உத்தரவை பிறப்பிப் பதில் ஊடகத்துறை அமைச்சர் காட்டி வரும் அசமந்தப் போக்குக் காரண மாக கடிதப் பறிமாறல்களும் அரசு மாற்றத்திற்கான அறிகுறிகளாகத் தென்படுவதாலேயே தேர்தல் திணைக்களம் தேர்தலுக்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை திடீர் தேர்தல்

(08ம் பக்கம் பார்க்க)

**யாழ்ப்பாணத்திலும் சார்ஸ் நோயா?**
**விசேட கட்டுரை உள்ளே**

## தாய்லாந்துப் பிரதமரின் இலங்கை விஜயம் ரத்து

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை அடுத்து தாய்லாந்துப் பிரதமரின் இலங்கை விஜயம் நேற்று கடைசி நேரத்தில் திடீரென ரத்துச் செய் யப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தோடு கலந்தாலோசித்த பின்பே இந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ள தாகவும் அடுத்துவரும் யூன் அல் லது யூலை மாதத்தில் அவர் இலங்கை வரவுள்ளதாகவும் தாய் லாந்து தூதரகம் அறிவித்துள்ளது.

தாய்லாந்துப் பிரதமரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டாலும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த வெசாக் தினக் கொண்டாட்டங்கள் கண்டியிலும் அநு ராதபுரத்திலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# யாழ்ப்பாணத்திலும் சார்ஸ் நோயா?

## எங்கும் பரபரப்பு, பயப்பீதி

**விதுரன்**

யாழ்ப்பாணத்திலும் "சார்ஸ்" என்ற பயப்பீதி இப்போது குடா நாட்டு மக்களை ஆட்டிப்படைக கிறது.

1995ஆம் ஆண்டு யாழ். குடா நாட்டில் இடம் பெற்ற இராணு வத்தாக்குதலின் போது ஏற்பட்ட மனநிலையில் இப்போது யாழ். மக்கள் இருக்கிறார்கள்.

எங்கு பார்த்தாலும் சார்ஸ் என்ற பேச்சே அடிபட்ட வண்ண முள்ளது.

கடந்த திங்கட்கிழமை சாவ கச்சேரியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் சளி,காய்ச்சலுடன் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப பட்டார். அவரைப் பரிசோதனை செய்த டாக்டர்கள், சார்ஸ் நோயாக இருக்கலாம் என ஊகித்துக் கொண்டனர். டாக்டர்க ளின் இம முடிவு நோயின் அறி குறிகளையும்,நோயாளியால் கொடுக்கப்பட்ட தகவல்களையும் அடிப் படையாகக கொண்டு எடுக்கப் பட்டதே தவிர, அது ஆய்வு கூடப் பரிசோதனைகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்டதல்ல.

எனினும், குறித்த யுவதிக்கு சார்ஸ்நோய் இருக்கலாம் என்ற டாக்டர்களின் கணிப்பு நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் வீசிய புயல் காற்றுப் போல் அதி வேகத்தில் யாழ்.போதனா வைத்தி யசாலை முழுவதும் அடிபடத் தொடங்கியது.

சார்ஸ்ஸா? யாழ்ப்பாணத்திலுமா? என்ற கேள்விகளோடு யாழ். போதனா வைத்தியசாலைப் பணியாளர்கள் கூடிக் கூடிக் கதைககத் தொடங்கி னர்.எனினும், போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்த நோயாளர்களுக்கு அச் செய்தி எட்டவில்லை. டாக்டர்க ளும், தாதிகளும், கண்காணிப்புப் பணியாளர்களும் கூடிக் கூடிக் கதைப்பதை, கடந்த கால மன உணர்வோடு பார்த்தால் "யாழ்ப்பணத்து மக்களை இடம் பெயரட்டாம்" என்ற செய்தியைக் கதைப்பது போல் இருந்தது. ஆனாலும், குறித்த செய்திபற்றி வைத்தியசாலைப் பணியாள்களிடம கேட்டறியும் மனத்துணிவு, நோயா ளர்களிடம் இருக்கவில்லை.

அதற்கு நோயின் தாக்கம் காரணமல்ல, சாதாரணமாக பனடோல் கேட்டாலே வில்லங்கம் ஏற்படும் போது பணியாளர்களிடம இதைக் கேட்டால் என்ன நடக்குமோ என்ற பயத்தால், நோயாளர்களும் தங்களுக்குள் கதைத்து விட்டு மௌனமாகி விட்டனர்.

### தகவலில் தடுமாற்றம்

யாழ்.போதனா வைத்திய சாலையில் சில டாக்டர்களும், தாதிமாரும்,முகத்தை மூடிக் கட்டிக கொண்டு திரிந்ததைப் பார்த்த ஒருவர் ஏதோ சிக்கல் இருப்பதை உணர்ந்துகொண்டு, விசாரணையை மேற்கொண்டார். அதன் விளை வாக சார்ஸ் நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார் என்ற செய்தி ஊடகங்களுக்குக்கிடைத் தது. எனினும் ஊகங்களின் அடிப்படையில் பிரஸ்தாப யுவதிக்கு "சார்ஸ்" நோய் எனமுடிவுகட்ட முடியாது என்ற அடிப்படையில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகன், அது பற்றிய தகவல்களை வெளியிட மறுத்து விட்டார்.

### அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அல்லோல கல்லோலம்

சளி, காய்ச்சல் ஆகியவற் றினால் பெரும் அவஸ்த்தைப் பட்ட பிரஸ்தாப யுவதியை டாக் டர்கள் உடனடியாக அதிதீவிர சிகிச்சைப்பிரிவிற்கு மாற்றி செயற்கை முறையில் ஒட்சிசன் கொடுத்தார் கள்.அங்கு வைத்துத்தான் அவரு க்கு "சார்ஸ்" நோய் இருக்கலா மென ஊகிக்கப்பட்டது. அந்த ஊகத்தோடு அதிர்ந்து போன அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரிகள் உயிருக் காகப் போராடும் நோயாளிகளை எவ்வாறு அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளுள் கொண்டு வருவார்களோ அதே வேகத்தில் உயிருக்காகப் போராடிக கொண்டிருந்த நோயாளர் களை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளியேற்றி னார்கள். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சார்ஸ் நோயாளி மட்டும் உயிருக்காகப் போராடிக் கொண்டி ருந்தார்.

### கண்காணிப்புக் கிடைக்கவில்லை

சார்ஸ் என்ற ஊகம், டாக்டர் களையே உலுப்பிவிட்டது. அதில



யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரி

நியாயமும் உண்டு. சீனாவில் "சார்ஸ்" என்ற நோயைக் கண் டறிந்த டாக்டரே அந்த நோய்க் குப் பலியாகி விட்டார்.

சார்ஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்த டாக்டர்கள் கூட பூலோக வாழ்வை இழக்க நேரிட்டது எனில், சத்திர சிகிச்சை நிலையத்திற்கு முன்னால் கயிற்றில் உலர விடப்படும் துணிக்கவசத்தை விட வேறு எந்தக் கவசமும் கிடையாத யாழ்.போதனா வைத்தியசாலையில், "சார்ஸ்" நோயாளியை டாக்டர்கள் எவ்வாறு பார்வையிட முடியும்? இந்தக் கேள்வியும் நியாயமானது தான்.ஆனால் எல்லாம கடந்த நிலையில் மனிதாபிமான நோக்கில் பார்க்கும் போது அப்படியா? என்ற ஏக்கம் ஏற்படுவதும்,சார்ஸ் நோயாளி என்று மருத்துவப் பரிசோதனை மூலம் உறுதிப்படுத் தாமல் வெறும் ஊகத்தின் அடிப் படையில் சார்ஸ் என முடிவு கட்டிவிட்டு பிரஸ்தாப நோயாளி யைக் கண்காணிக்காமல் விடுவது தகுமா? என்றவாதம், நியாயம் என்ற நாணயத்தின் மறு பக்கமாகவுள்ளது. அதிதீவிர சிகிச் சைப் பிரிவில் பிரஸ்தாப நோயாளி அனுமதிக்கப்பட்டதும் அங்கு கட மையில் இருந்த பணியாளர்கள் திடீர் சுகயீன லீவு கொடுத்ததாக வும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதுவாயினும் துறைசார்ந்த வைத்திய நிபுணர்களின் கண் காணிப்புக்கு எட்டாத நிலையில் சார்ஸ் என்ற உறுதிப்படுத்தப் படாத நோயின் பெயரோடு மர ணித்துப்போன அந்த இளம் யுவதியின் நிலை பரிதாபத்துக் குரியதே.

### சார்ஸ் எப்படி வந்திருக்கலாம்?

சளி,காய்ச்சல்,மூச்சுத் திணறல் போன்றவை சார்ஸ் நோயின் அறி குறியாகத் தெரிவிக்கப்பட்ட போதி லும் அந் நோயின் பரம்பல்,நோய் அரும்பும் காலம் போன்ற விடயங் கள் இன்னமும் ஆய்வுக்குரியதா கவே இருக்கிறது.அதாவது சார்ஸ் நோய் பற்றிய முழுமையான விப ரங்கள் இன்னமும் கண்டறியப்படாத நிலையில் சார்ஸின் உயிர்ப்பு சீனாவிலேயே முதன் முதலில் ஏற் பட்டதெனவும்.இது சீனர்கள் அதி கம் வாழும்கனடா நாட்டின்ரொறன்டோ நகரிலும் பரவியிருப்பதாகவும். செய்திகள் வெளியாகியுள்ளன.

சார்ஸ் நோய் கண்டு பிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து உலக நாடு கள் முழுவதும் விழிப்படைந்து கொண்டன. இதில் இலங்கையும் அக்கறை காட்டியதென்றே கூற வேண்டும்.ஆனால் இவற்றின் மத் தியில் யாழ்ப்பாணத்தில் சார்ஸ் என்ற நோய் எவ்வாறு பரவியிருக்க முடியும் என்ற கேள்வி மருத்துவர் களைச் சிக்கலுக்குள்ளாக்கியுள் ளது.

சார்ஸ் நோய் என இனம் காணப் பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் யுவதியின் வீட்டில்,அவர் களது உறவினர்கள் கனடாவில் இருந்து வந்து தங்கியுள்ளனர்.இது கடந்த இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் நடந்தது.ஆனால் கனடா வில் இருந்து வந்தவர்களுக்கு சார்ஸ் நோய் ஏற்படவில்லை.அவர் கள் இப்போதும் கனடாவில் சுக மாக இருக்கிறார்கள் என்ற விபரம தெரியவந்துள்ளது.அப்படியானல் சார்ஸ் நோய்க்கிருமி ஒருவரில் தொற்றினாலும் அவருக்கு நோய் ஏற்பட வேண்டும் என்பதில்லை. அவர் ஓர் நோய்க் காவியாகவும் இருக்கலாம் என்ற முடிவின் அடிப் படையிலேயே பிரஸ்தாப யுவதிக்கு சார்ஸ் நோய் ஏற்பட வாய்ப்பிருந் திருக்க முடியும்.

எதுவாயினும் சார்ஸ் நோயில் நோய்காவியும் இருந்திருக்க முடியுமா என்ற ஆய்வுகள் இன்னமும் உறு திப்படுத்தப்படாத நிலையில் பிர ஸ்தாப யுவதிக்கு ஏற்பட்டது சார்ஸ் நோய்தானா? என முடிவு கட்டிவிட முடியாதுள்ளது.

### ஆய்வுகூட வசதியில்லை

யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் போதிய ஆய்வு கூட வசதியின்மை உயிர் காக்கும் பணிக்குப் பெரும் சவாலாக உள்ளது.

சாதாரணமாக நெருப்புக் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறப் போகும் நோயாளி மலேரியாவுக் கான மாத்திரைகள்ள விழுங்கி அவஸ்த்தைப்படும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சார்ஸ் நோயை உறுதிப்படுத்தும் மருத்துவப் பரிசோதனையை எதிர்பார்க்க முடியாது.

ஆதலால் நோயாளியின் இரத்தம் மற்றும் உள்ளுறுப்புக கள் சில மருத்துவ ஆய்வுக்காக டபிள்யு.எச்.ஓவுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.இதன் முடிவுகள் வெளியாகக் குறைந்தது ஒரு வாரமாவது ஆகும்.அதுவரை "சார்ஸ்" என்ற பயப்பீதியும் யாழ்ப பாணத்தில் நீடிக்கவே போகிறது.

### சடலம் பாதுகாப்பாக அடக்கம் செய்யப்பட்டது.

"சார்ஸ்" நோயின் அறி குறியுடன் அனுமதிக்கப்பட்ட யுவதி நேற்றுக் காலை 9மணி யளவில் இறந்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் இறப்பு நேற்றுக் காலை 9மணிக்குத் தான் நடந்ததா? அல்லது நேற்றுக காலை 9மணியளவில் தான் அவர் இறந்தது அவதானிக்கப் பட்டதா என்பது ஆராய்வுக் குரியது.

எதுவாயினும் நோயாளி இறந்து விட்டார் என்பது மட்டும் உண்மை. அவரது சடலம் பாதுகாப்பான முறையில் பேழையில் அடைக கப்பட்டு பொது சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொலி ஸாரின் உதவியுடன் சாவகச் சேரி மயானத்தில் அடக்கம் செய்யப் பட்டது.

---

## உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான நிதி அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் புனரமைப்பு நட வடிக்கைகளுக்கான நிதியை அதிகரிப்பதென உலக உணவுத்திட்டத் தின் ஆசிய வலயப் பணிப்பாளர் அன்ரனி பண்டறி தீர்மானித்துள்ளார்.

நேற்று முன்தினம்கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் அவர் இத்தகவலை வெளியிட் டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட பணிப்பாளர்,

தற்போது நடைமுறைப்படுத்தப் படும் புனரமைப்பு நடவடிக்கை களின் முன்னேற்றம் காரணமாக முன்னர் தீர்மானிக்கப்பட்ட 17.9 மில்லியன் டொலர் நிதி உதவியை 22.8 மில்லியன் டொலராக அதி கரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இலங்கை அரசியலில் கருத்து முரண்பாடுகள் நிலவினா லும், அந்நாட்டுக்கு வழங்கப்படும் புனரமைப்பு உதவிகளில் எவ்வித பாதிப்பும்ஏற்படாது.தற்போது வழங் கப்படும் நிதி உதவிகள் அதிகரிக் கப்பட வாய்ப்பு உண்டு என்றார்.

இதேவேளை,ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைககு உதவி வழங்கும் மாநாட்டில் தானும் கலந்து கொள்ளப் போவதாகவும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## குடிசைகள் சேதம்

(கொழும்புத்துறை)

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக குரு நகரிலுள்ள திருநகரில் குடிசைகள் சில சேதமடைந்துள்ளன.

இதனால் இவ் ஏழைக் குடும்பங் கள் பொது இடங்களில் தஞ்ச மடைந்துள்ளன. (உ-51)

## மருதங்கேணியில் ஐஸ் தொழிற்சாலை

### சிரான் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

சிரான் நிதி ஒதுக்கீட்டில் மருதங் கேணிப் பகுதியில் ஐஸ் தொழிற் சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

யாழ். குடாநாட்டில் பிடிக்கப் படும் மீன்களைப் பத்திரப்படுத்தி தென் இலங்கைக்கு அனுப்புவதற்கு ஏதுவாகவே இத் தொழிற்சாலை அமையவுள்ளது.

இதன் மூலம் ,குடாநாட்டு மீனவர் களின் பொருளாதார நிலையில் மேம்பாடு எதிர்பார்க்கப்படுவதுடன் பலருக்கு வேலைவாய்ப்புக்களை யும் வழங்க முடியும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. (உ-7)

## எயிட்ஸ் விழிப்புணர்வுத் திட்டம் யாழில் 20 ஆயிரம்பேர் பயன்

(ஈச்சமோட்டை)

அகதிகள் புனர்வாழ்வு நிறு வனமும் யுனிசெவ் அமைப்பும் இணைநது நடத்தும் எயிட்ஸ் நோய்த் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச் சித்திட்டத்தில் இதுவரை இருபதி னாயிரம்பேர் பயனடைந்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் 14 பிரதேச செயலக எல்லைகளுக்குள் 40 எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்த ரங்குகள் நடாத்தப் பட்டுள்ளன.

விாவுரைகள், கலந்துரையாடல்கள், துண்டுப்பிரசுரங்கள், வீடியோகாட்சிகள் மூலமாக இவ் விழிப்புணர்வு நிகழ்ச் சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

தற்போதைய நிலையில் யாழ்.குடா நாட்டில் 23 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 16 பேர் இறந்துள்ளனர். எனினும் அதிக எண்ணிக்கையானோர் தொற்றுக்குள் ளாகி இனங்காணப்படாமல் இருக் கலாம் என நம்பப்படுகிறது.

அவ்வாறானவாகளினூடாக ஏனைய வர்களுக்கும் இந் நோய் பரவிவிடக் கூடாது என்பதற்காகவே இவ் விழிப் புணர்வுத்திட்டம் யாழில் முன்னு ணர்ந்து நடாத்தப்படுகின்றது. (உ-59)

## இன்னும் ஒரு தகவல்

### புத்தரும் — ஒரு கொலைகாரனும்

புத்தர் வாழ்ந்த காலத்தில் ஒரு பயங்கரமான கொலை காரன் இருந்தானாம். கொலை, கொள்ளை இப்படிப் பல வித பாவங்களை செய்தவன் அவன். அவனுக்கு திடீ ரென்று புத்தரைப பார்க்க வேண்டுமென்ற ஒரு ஆசை. இருந்தாலும் எப்படிப்பார்ப்பது? இவனைப்பற்றி எல்லோருக் கும தெரியும். அதனால், நேரடியாகப் போய் புத்தரை பார்க்கவேண்டும் என்றால், யாரும் அனுமதிக்க மாட் டார்கள். 'என்ன பண்ணு வது? என்று யோசனை பண்ணி னான்.' யாருக்கும் தெரியாமல் சுவர் ஏறிக்குதித்து மடத்துக்குப போய் விடுவோம் என்று முடிவு பண்ணினான். அதுமாதிரிச் செய்தும் விட்டான்.

உள்ளே போய்ப் பார்த்தால், யாரையும் காணவில்லை. ஆள் நடமாட்டமே இல்லை. புத்தர் வெளியே போயிருந்தார். இவன் ஒருமாதிரியாக அங்கும் இங்கும் தேடிஅலைந்த சமயத்தில் ஒரு சீடரிடம் மாட்டிக்கொண்டான். அவர் என்ன சமாச்சாரம் என்று விசாரித்தார். 'ஐயா! நான் திருடுவதற் காக இங்கு வரவில்லை. என்னை தப்பாக நினைக்காதா கள். புத்தரைப்பார்க்க வந்தேன். வாசல வழியாக வந்தால் விடமாட்டீர்கள். அதனால் சுவர்ஏறிக் குதித்து வந்தேன். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். புத்தரைப்பார்க்க வேண்டும். அவ்வளவுதான்' என்றான்.

உடனே அந்தச்சீடர் சாரி புத்தனிடம் இவனை அழைத் துக் கொண்டு போனார். அவருக்கு மிகவும் ஆச்சரியம். 'எனனப்பா, எதற்காக இங்கே வந்தாய்'? என்றார். 'புத தரைப் பார்க்க வந்தேன்' என்றான். எதற்காகப் புத்த ரைப் பார்க்கவேண்டும்? என்றார் அவர். 'எனக்கு எல் லாமே வெறுத துப்போய்விட்டது. என்னுடைய பாவங்களிலி ருந்து நான் விடுபட வேண்டும். அதற்குப் பிராய்ச்சித்தமாக சநநயாசி ஆகிவிட வேண்டும். மக்கள் தொண்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும' என்று சொன்னான்.

அங்கே இருந்தவர்களுக்கு மிகவும் வியப்பாய் இருந்தது. 'இவன் கொலை பண்ணினவன், கொள்ளை அடித்தவன், நிறையப்பண்ணியவன். சந்நியாசி ஆகுவதற்கான தகுதி இவனுக்கு உண்டா?' என்கின்ற சந்தேகம் வந்தது. சோதிட மூலமாக அதைப்பார்த்து விடலாமென்று நினைத்தார்கள். 'எந்தப்பிறவியிலேயாவது இவன் ஏதாவது கொஞ்சம் புண் ணியம் பண்ணியிருந்தால் கூட போதும்' என்று நினைத்து சாாபுத்தன் ஜாதகம் பார்க்க ஆரம்பித்தார். அதன் பின்னர் தான், பழைய பிறவியில் இவன் இதைவிட மோசமாக இருந்திருக்கிறான். ஒரு துளிகூட நல்லது செய்ததில்லை. அதனால், இவனுக்கு விமோசனமே கிடையாதென்கின்ற முடிவுக்குத்தான் வந்தார்கள். அதுமட்டுமில்லை 'இப்படியும் ஒரு ஜென்மமா? இவனை உடனடியாக வெளியே துரத்துங்கள்' என்று சத்தம் போட்டார்கள்.

இவனுக்கு அதைக்கேட்டதும் கோபம் வரவில்லை. ஆனால், மனத்திற்குக் கஷ்டமாக இருந்தது. புத்தரை நெருங்கக் கூட நமக்கு தகுதியில்லை என்கின்ற பொழுது, நாம் எதற் காக உயிர்வாழ வேண்டும்? என்று எண்ணத் தோன்றியது. தற்கொலை பண்ணிக்கொள்ளலாம் என்று சொல்லி வெளி மதில சுவரில் தலையை மோதி உடைத்துக்கொள்ள ஆரம் பித்தான. அந்தச்சமயம் புத்தர் வெளியேயிருந்து உள்ளே வந்து கொண்டிருந்தார். தலையில் இரத்தத்தோடு இருக கின்ற இவனைப்பார்த்தார். தடுத்து நிறுத்தினார். புத்தரை பார்த்ததும் அவனுக்குப் பரவசம். காலில்விழுந்து அழு தான். புத்தர் ஆறுதல் சொன்னார். என்ன நடந்தது என்று கேட டார். ஏன் இவனை விரட்டினீர்கள்?' என்று சீடர் களிடம் கேட்டார். அவர்கள் விபரத்தை சொன்னார்கள். 'இவனை ஒரு வாரத்தில் தகுதி உடையவனாக ஆக்கிவிட முடியும் 'என்றார் புத்தர். சீடர்களுக்கு நம்பிக்கை வர வில்லை.

புத்தர் இவனைப் பார்த்து 'நீ என்னுடனேயே இருந்து கொள்' என்று சொல்லி விட்டார். இவனுக்கு மிகவும் ஆனந்தம். ஒரு வாரத்தில் இவன் நல்ல மனிதனாகமாறி விட டான். அடக்கம், அமைதி, சாந்தம் எல்லாம் வந்து விட் டது. சந்நியாசி ஆகும் தகுதி வந்துவிட்டது. சீடர்களுக்கு மிகவும் ஆச்சரியம். எப்படி இந்த அதிசயம் நடந்ததென்றார் சாரி புத் தன். இப்பொழுது புத்தர், 'சாரிபுத்தா-நீ நல்லவன். ஆனால உனக்கு ஞானமில்லை! பாவங்களின் சுமை என்ன வென்பது உனக்குத் தெரியாது. அதன் தவிப்பு எப்படி இருக்கும் என்பது உனக்குத் தெரியாது! உனக்கு அந்த அனுபவம் இல்லை. அதுமட்டுமில்லை. நீ சோதிடத்தில் கடந்த காலத்தை மட்டும்தான் பார்த்தாய் ! இறந்த காலம் என்பது இறந்துபோன நேரம். அது எதற்கு ஆகும்? எதிர் காலத்தை நினைத்துப்பார்க்கவேண்டும். அதை உருவாக்க வேண் டும். தன்னுடைய பாவச்சுமையிலிருந்து-இறந்தகாலத்திலி ருந்துவிடுபட இவன்பட்ட தவிப்புத்தான் இவனுக்கு விடுதலை யைத் தேடிக் கொடுத்திருக்கிறது' என்றார் புத்தர்.

நல்லவர்களை விட குற்றவாளிகள்தான்சீக்கிரமாக பக்குவ நிலையை அடைய முடியும். தம்மை நல்லவர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு, விமோசனமும், பரிபக்கு வமும் சுலபமாகச சித்திப்பதில்லை. இதைக் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நானொரு சின்னப்பையனைப் பார்த்து 'நாம் செய்கின்ற பாவங்களை கடவுள் மன்னிக்க வேண்டும் என்றால் நாம் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டேன். 'கடவுள் நமது பாவங்களை மன்னிக்க வேண்டுமென்றால், முதலல் நாம பாவங்களை செய்ய வேண்டும் சார். அப் போது தானே அவரால் அதை மன்னிக்க முடியும்!' என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நபிகள்நாயகம் வழிநின்று சமாதானத்தை நிலைநிறுத்துவோம்

## ஜனாதிபதி மீலாத் வாழ்த்துச்செய்தி

(கொழும்பு)

நபிகள் நாயகத்தின் போதனை கள் சமாதானத்தின் முக்கியத் துவத்தை எடுத்துரைப்பதாக அமை வதால் இலங்கைமக்கள் அனை வரும் சமாதானத்தை நிலை நாட்ட உறுதிபூண வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட் டுள்ள மீலாத் வாழ்த்துச்செய்தி யில் குறிப் பிட்டுள்ளது.

அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும்,

நபிகள் நாயகத்தின் போதனை கள் சகோதரத்துவத்தையும், நட் புறவையும், ஒற்றுமையையும் பேணி வளர்ப்பதற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

அதனை பின்பற்றி, அனை வரும் வாழ்வதன்மூலம் நாட்டில் அமைதியும், சாந்தியும், சமாதான மும் நிலவும்.

முஸ்லிம் மக்கள் மீலாத் விழாவை யும் பௌத்தர்கள் வெசாக் பண்டி கையையும் அடுத்தடுத்த தினங் களில் கொண்டாடுவது முக்கியத துவம் வாய்ந்தது.

சமாதானத்தையும் ஒற்றுமை யையும் நிலைநாட்டுவதற்கு இத்தகைய சமயநிகழ்வுகள் வழி



வகுக்கும் என குறிப்பிடப்பட்டுள் ளது. (தி)

# கடற்படையின் தாக்குதல்களை கண்டித்து மீனவர் சமூகம்கிளர்ந்தெழும்

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மீனவர்கள் மீதான கடற்படையினரின் தேவையற்ற தாக்குதல்கள் தொடர்பில் செய் யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை என வட மாகாண கடற்றொழிலாளர் சங் கங்களின் சமாசத்தலைவர் வ.தவரட்ணம் கவலை தெரிவித் துள்ளார்.

இதுபற்றி எமது செய்தியாளர் களிடம் அளவளாவிய அவர்,

தொழிலுக்குச் செல்லும் மீன வர்கள் கடலில் மட்டுமன்றி தரை யிலும் கடற்படையினரால் தாக் கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் அடிக் கடி இடம்பெற்று வருகின்றன. இவை குறித்து உடனுக்குடன் சம்பந்தப்பட டவர்களுக்கு நாம் முறையிட்டு வருகின்றோம்.

இருப்பினும், இற்றைவரை இத் தகைய ஒருசம்பவம் பற்றியேனும விசாரணையோ அன்றி நடவ டிக்கை எதுவுமோ எடுக்கப்பட வில்லை.

தவிரவும், இவ்வாறான சம்பவங் களால் அச்சமடைந்துள்ள மீன வர்கள கடலில் சென்று தொழில் புரிவதற்கு பின்னடித்து வருகின் றனர்

இதனால் அவர்களின் பொரு ளாதாரம் மேலும் கீழ்நிலை அடை யும் அபாயம் எழுந்துள்ளது.

இதைவிட, அண்மைய நாட் களாக கொழும்புத்துறை, தீவ கம், மாதகல் பகுதி கடற்பரப்பில் மீனவர்மீதான படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் தக்கபதில் கூறத் தவறுமிடத்து, இதற் கெதிராக மீனவ்சமூகம கிளர்ந்தெழுந்து போரிடு வதைத் தவிர வேறுவழி இருப்பதாக தெரியவில்லை என்றார் (உ-7)

## இராசி பலன்

15.05.2003

(வைகாசி 1 வியாழன்)

சதுர்த்தசி ந.ப 12.17

சுவாதி பி.ப 3.08

இராகுகாலம்1.23- 2.53வரை

சுபநேரம் 7.23 - 8.53 வரை

(பூரணை அமிர்த சித்தம்)

**மேடம்**
திடீர்ப்பயணம், அபூர்வ சந்திப்பு, கௌர வமான நிலை, காரிய அனுகூலம்.

**இடபம்**
சத்துரு ஜெயம், வருமானம் அதிகரிப்பு, தேகநலன், கருமங்கள் கைகூடும்.

**மிதுனம்**
தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, காரிய இடையூறு, வாக்கு மேன்மை,

**கடகம்**
தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், கற்பனை மிகுதி, பணத்தட்டுப்பாடு.

**சிங்கம்**
பிறர் உதவி, கூட்டு முயற்சி, இனிய சம்பவம், புதிய பொருட் சேர்க்கை,

**கன்னி**
மாதர் நட்பு, அதிகசெலவு, வேலைக் கஸ்டம், அமைதிக்குறைவு.

**துலாம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், சயன சுகம், நண்பர் உதவி, புதிய முயற்சி.

**விருச்சிகம்**
பிதர் சிந்தை, கோபப்படுதல், எடுத்த காரியம் தாமதம், நல்ல செய்தி.

**தனுசு**
தொழில் சிந்தை, தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி போசனசுகம்.

**மகரம்**
சுபநிகழ்ச்சி, உற்சாகம், தொழில் விருத்தி, இஷ்ட சித்தி.

**கும்பம்**
சான்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, அச்சமான நிலை, முயற்சி தாமதம்.

**மீனம்**
வீண் தொல்லை, ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல் போசன சுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

## தேசிய லொத்தர்சபை விவகாரம்

# சட்ட நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கே கூறமுடியும்

## சட்டமா அதிபர் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரங் காவினால் அபிவிருத்திலொத்தர் சபை பொறுப்பேற்கப்பட்ட விடயம் சம்பந்தமான சட்ட நிலைப்பட்டை நாட்டின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதி ஒருவருக்கு மாத்திரமே வெளிப் படுத்த முடியுமென சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் தெரிவித்துள்ளார்..

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் கீழிருந்த லொத்தர் சபை ஜனாதிபதியால் மீளப் பெறப்பட்டுள்ள போதும், லொத்தர் சபை மீளப்பெறப்பட்டமை தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரமாகாததால், லொத்தர் சபையை கையேற்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என அரசதரப்பினரும், லொத்தர் சபையினைக் கையேற பதற்கான உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளதால் அந்த உத் தரவு செல்லுபடியாகும் என எதிர்க்கட்சியினரும் வாதாடி வருகின்றனர்.

இதனால் தோன்றியுள்ள, சட்டச்சிக்கல்களுக்குத்தீர்வு காணும் வகையில் சட்டமா அதிபர் தமது கருத்தை வெளியிட வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். இந்தக்கோரிக்கை தொடர் பாகப் பதிலளிக்கும் போதே, லொத்தர் சபை மீளப் பெறப்பட்ட சம்பவம் தொடர்பான சட்டநிலைப்பாட்டை ஜனாதி பதிக்கு மட்டுமே தெரி விக்க முடியுமென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஊடகத்துறை அமைச்சருக்கோ அல்லது அர சாங்க அச்சகக்கூட்டுத்தாபனத் தலைவருக்கோ இதுபற்றி அறி விக்க முடியாது எனவும் சட்டமா அதிபர் மேலும் சுட்டிக் காட்டி யுள்ளார். (த)

## ஸ்ரீ.சு.க.அலுவலகம் மீது தாக்கு

# சந்தேக நபர்கள் நால்வர் சரீரப் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலு வலகம் தாக்கப்பட்டமை தொடா பாக 4சந்தேக நபர்கள் சட்டத் தரணி சி.வி. கலபதி ஊடாக நேற்றுமுன்தினம் நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகம் தாக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந் தானந்த அளுத்கம நாவலப் பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய விசாரணை மேற் கொண்ட பொலிஸார், இவர் களைக் கைது செய்து நீதி மன்றத தில் நேற்றுமுன்தினம் ஆஜர் படுத்திய போது, நீதவான் சந் தேக நபர்களைத்தலா 2ஆயிரத்து 500ரூபா காசுப் பிணையிலும், தலா 25ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்தார். (தி)

### ஜேர்மன் பத்திரிகையாளர் யாழில்:

(தென்மராட்சி)

ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த பத்திரிகையாளரான மைக்கேல் கிளீச் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

ஜீ.ரீ.சற் நிறுவனத்தின் அதிகாரி களுடன் இங்கு வந்துள்ள இவர் யாழ்ப்பாணத்து நிலைமைகள் பற்றியும்,சமாதானம் தொடர்பாக மக்களின் உணர்வுகளையும் பொது அமைப்புகளுடன் பகிர்ந்து வருகிறார். (உ-77)

# சீனாவில் சுரங்க வெடி விபத்து 50 தொழிலாளர்கள் உயிரிழப்பு

(பீக்கிங்)

சீனாவின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சுரங்கமொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற வெடி விபத்தில் 50 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதுடன், 30ற்கும் அதிகமானோர் இடிபாடுகளுக்குள் சிக்கி காணாமல் போயுள்ளனர்.

சீனத் தலைநகர் பீக்கிங்கில் இருந்து 675 கிலோமீற்றர் தெற்கே உள்ள ஸ்ரீபேக் நகரில் இந்த நிலக்கரிச் சுரங்க விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்து நிகழ்ந்த நேரம் நூற்றுக்கும் அதிகமான சுரங்கத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களில் இருபது பேர்வரை அதிர்ஷ்டவசமாக உயிர்பிழைத்துள்ளனர் என்று சீன சுரங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனாவின் சுரங்கத் தொழில், உலகிலேயே அபாயகரமானதொன்று என்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றாக்குறையாக இருப்பதே இவ்வாறான விபத்துக்கு முக்கிய காரணம் என்றும் சீன அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடம் மட்டும் சீனாவில் இடம்பெற்ற சுரங்க விபத்துக்களில் 7 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

## வாஜ்பாய் சீனா விஜயம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் சீனாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக மத்திய படைத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின் போது சீனா-இந்தியா இடையிலான எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு முன்வைக்கப்பட்டு அது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ-2)

## தற்கொலைத் தாக்குதல் பலியானோர் எண்ணிக்கை 47 ஆக உயர்வு

(லண்டன்)

செச்சினிய வடக்குப் பகுதியிலுள்ள ஜாமென்கோயோ நகரில் அரசு தலைமையகக் கட்டடம் மீது நடந்த தற்கொலைத் தாக்குதலில் மரணமானோர் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில் இறந்த 10 குழந்தைகளும் 15 பெண்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் காரணமாக 110 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவர்களில் 57 பேரின் நிலைமை மோசமாக உள்ளதாக ரியா-நோவோஸ்தி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ)

## படைக் கல்லூரி பேராசிரியர் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்கு

(புதுடில்லி)

மும்பையில் அண்மையில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புத் தொடர்பாக கைது செய்யப்பட்ட பேராசிரியர் ஒருவர் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அண்மையில் மும்பையிலுள்ள மூதூர் என்னும் இடத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்பில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூர்னேபடைக் கல்லூரியைச் சேர்ந்த உருதுமொழி பேராசிரியரான அன்பரவி என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது இவர் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 26ஆம் திகதி வரை பொலிஸ் காவலில்வைத்து விசாரணை நடத்தவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (உ-2)

## தென்கொரியக் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதின

(சியோல்)

தென்கொரியாவுக்குச் சொந்தமான இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் மோதி விபத்துக்குள்ளர்னதில் சுமார் 2 இலட்சம் தொன் எண்ணெய் கடலில் கலந்துள்ளது.

தென்கொரியாவின் தென்கிழக்குத் துறைமுகமான பூஷானுக்கு அருகிலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதனையடுத்து இக்கப்பல்களிலிருந்து வெளியேறும் எண்ணெய் தொடர்ந்தும் கடலில் பரவுவதைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென்கொரிய கடற்படைப் பொலிஸார் கூறியுள்ளனர். (உ-2)

## பாகிஸ்தான் முன்வைத்த தீர்வுத்திட்டம் ஐ.நா. பாதுகாப்புப் பேரவை புறக்கணிப்பு வெளிவிவகார அமைச்சர் கவலை

(இஸ்லாமபாத்)

காஷ்மீர் விவகாரத்திற்குத் தீர்வு காணும் பொருட்டு முன்வைக்கப்பட்ட 1948ஆம் ஆண்டுத் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை புறக்கணித்துள்ளமை குறித்து பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கவலை தெரிவித்துள்ளார்.

சமாதான விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் நடத்தப்பட்ட பாதுகாப்புப் பேரவையின் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசும்போதே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் மியான் குர்சீத்முகமத்கசூரி இதனைக் கூறியுள்ளார்.

மேலும் காஷ்மீர் விவகாரத்திற்கு அமைதியான முறையில் தீர்வு காணும் பொருட்டு இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் யோசித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பாக பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான முக்கிய அம்சங்கள் கொண்ட பிரேரணை ஒன்றை இந்தியா கடந்த திங்கட்கிழமை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இராணுவத் தளபதி பதவியை இராஜினாமாச் செய்ய முஷாரப் முடிவு

(இஸ்லாமபாத்)



இராணுவத் தலைமைத் தளபதி பதவியையும் நாட்டின் அதிபர் பதவியையும் ஒரே நேரத்தில் வகித்து வரும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இராணுவத் தளபதி பதவியை இராஜினாமாச் செய்துவிட முடிவு செய்துள்ளார் என்று அந்நாட்டு செய்திதுறை அமைச்சர் ஷேக்ரஷீத் அகமது தெரிவித்துள்ளார்.

1999ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய முஷாரப், பின்னர் நாடு முழுவதும் கருத்துக் கணிப்பு நடத்தி, தானே நாட்டின் அதிபராகியதும் தெரிந்ததே.

அதிபர் பதவியையும், இராணுவத் தளபதி பதவியையும் முஷாரப் வகிப்பதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இரண்டில்ஏதாவது ஒரு பதவியை முஷாரப் இராஜினாமாச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கும் அவை இடையூறு ஏற்படுத்தி வருகின்றன.

இரு மாதங்களுக்கு மேல் நீடித்து வரும் அரசியல் முட்டுக்கட்டைக்கு தீர்வு காணும் நோக்கத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அடங்கிய சிறப்புக் குழு நேற்று முன்தினம் கூடி இந்தச் சிக்கலைத் தீர்ப்பது குறித்து விவாதித்தது.

இந்நிலையில் இரண்டில் ஒரு பதவியை முஷாரப் கைவிட்டுவிடுவார் என்று பாகிஸ்தான் அமைச்சர் ரஷீத் அகமது அறிவித்துள்ளார்.

இதேவேளை, இரு பதவிகளையும் ஒரே நேரத்தில் தான் வகிக்க முடியாது என்று முஷாரப் ஒப்புக்கொணடுள்ளார். ஆனால் இராணுவத் தளபதி பதவியை விட்டு விலக சிறிது காலம் பிடிக்கும். அது குறித்த திகதியை அவரால் இப்போது கூற முடியாது என்று ரஷீத் மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)


World News உலக தரிசனம்

## சமாதானத் திட்டங்களில் மீளாய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை கொலின்பவல் உறுதிபடத் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கிற்கான சமாதானத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்படமாட்டாது என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் உறுதிபடக் கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு சமாதானம் தொடர்பாக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டங்களை இஸ்ரேல் ஏற்க மறுத்துள்ளதை அடுத்தே கொலின்பவல் இவ்வாறு கூறியுள்ளார்.



மேலும், பலஸ்தீனத்தினால் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமது மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் அந்தப் பிராந்தியத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த வழியாகவே காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-2)

## அணுவாயுதத் தயாரிப்பு வட-தென் கொரியாக்கள் இடையிலான ஒப்பந்தம் காலாவதியானது

(பியோங்யாங்)

கொரியத் தீபகற்பத்தில் அணு ஆயுதங்களை தயாரிப்பதில்லை என்று தென்கொரியாவுடன் 1992இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் செத்துப்போன ஆவணம் என்று வடகொரியா கூறியுள்ளது.

தென்கொரிய அதிபர் ரோமூ ஹீன், அமெரிக்க அதிபர் புஷ் ஆகியோர் அணுஆயுதம் குறித்து இந்த வாரத்தில் வாஷிங்டனில் சந்தித்துப் பேசவுள்ள இந்நிலையில் இந்த அறிவிப்பை வடகொரியா வெளியிட்டுள்ளது.

தங்களிடம் அணுஆயுதம் இருப்பதாக கடந்த மாதம் கூறிய வட கொரியா, அமெரிக்கா திடீரென அணு ஆயுதத்தால் தாக்குவதைத் தடுக்கவே தாங்களும் அணு ஆயுதம் தயாரித்ததாக கூறியுள்ளது.

இதேவேளை, அணுஆயுதப் பரவலைத் தடுக்கும் சர்வதேச உடன்படிக்கையிலிருந்து கடந்த ஜனவரியில் வடகொரியா விலகிக் கொண்டது.

பாகிஸ்தான், ஈரான், லிபியா, சிரியா, எகிப்து, ஜேமன், ஐக்கிய அரபுஎமிரேட் ஆகிய நாடுகளுக்கு வடகொரியாவின் ஏவுகணைகள் 2001 இல் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் போதை மருந்து, போலி அமெரிக்க டொலர்கள் ஆகியவற்றையும் வடகொரியா விற்கிறது என்றும் தென்கொரியாவின் தலைநகர் சியோலில் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளர். (உ-9)

## நல்லெண்ண நடவடிக்கையாக 300 இந்தியக் கைதிகளை விடுவிக்க பாகிஸ்தான் அரசு முடிவு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் பல்வேறு சிறைகளிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ள 300 இந்தியர்களையும் விடுதலை செய்ய பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.

இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளவர்களில் 250 இந்திய மீனவர்களும், இந்தியாவுக்குச் சொந்தமான ''ராஜலட்சுமி'' என்ற கப்பலில் பணிபுரிந்த 14 ஊழியர்களும் 22 சீக்கியர்களும் அடங்குகின்றனர்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக உள்ள நிலையில் இந்தியக் கைதிகளின் விடுதலை இரு நாடுகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல வகை செய்வதாக அமைந்துள்ளதென அங்குள்ள அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர். (உ-2)





சவுத் தலைநகரில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் சேதமடைந்த கட்டடத்தையும், பாதிக்கப்பட்ட பெண் ஒருவரையும் படங்களில் காணலாம்.

## அமைச்சர் கொலின் பவல் ரஷ்யா சென்றடைந்தார்

(மொஸ்கோ)

அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தனது சவுதி விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று ரஷ்யா சென்றடைந்துள்ளார்.

ஈராக்கின் எதிர்கால எண்ணெய் வளம் குறித்து ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அவர் அங்கு சென்றுள்ளார்.

மேலும் ஈரானுடன் ரஷ்யா கொண்டுள்ள அணுஆயுத உடன்பாடு தொடர்பான அமெரிக்காவின் கருத்துக்களை ரஷ்யத் தலைவர்களுக்கு எடுத்துக்கூறுவதுடன்,

அமெரிக்க ரஷ்ய உறவுகளில் ஏற்பட்டுள்ள விரிசல்களுக்கும் தீர்வு காணும் பொருட்டு முக்கிய பேச்சு வார்த்தைகளையும் இவர் நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-2)

# மூவினக் கலைஞர்களும் சங்கமிக்கும் அமைதிக்கான கலைவிழா நேற்று ஆரம்பம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் நடத்தும் மூவினக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் அமைதிக்கான கலைவிழா நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபதில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

நேற்றைய நிகழ்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இக்கலை விழாவில் சிறுவர் சமாதான பாசறை, திருமறைக் கலாமன்ற மாநாடு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இதில் பங்கு கொள்ளும் பொருட்டு கொழும்பு,திருகோணமலை,வவுனியா, பாணந்துறை,புத்தளம், மாத்தறை, பிபிலை,மன்னார். ஹப்புத்தளை, மொறட்டுவ,வன்னி உட்பட பல இடங்களில் இருந்தும் 25ற்கும் மேற்பட்ட பஸ்வண்டிகளில் நூற்றுக்கணக்கானோர் வருகை தந்துள்ளனர்.

நேற்றைய தினம் சிங்கள சிறுவர் நாடகமாகிய 'தொப்பி வியாபாரி', புரட்சிப்பறவைகள் அமைப்பின் 'கரை தேடும் ஓடங்கள்' இந்தியசாஸ்திரிய நடனங்கள் பற்றிய செயல் முறை விளக்கம்,'என்னைப்பார்'எனும் ஆங்கில நாடகம் மற்றும் வசந்த ஒபயசேகராவின் சிங்கள திரைப்படம் ஆகியன இடம்பெற்றன'.

இரண்டாம் நாளான இன்று வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர் சமாதானப் பாசறை இடம்பெறவுள்ளது. இப் பாசறையில் 500இற்கும் மேலான மூவினச் சிறுவர்களும் பங்கு கொள்ளவுள்ளனர்.

சிறுவர் கருத்துரையமர்வும் அதனைத்தொடர்ந்து பி.ப 5 மணிக்கு சிறுவர் சமாதானப் பாசறையில் பங்கு. கொள்ளும் சிறுவர்களின் பல்வேறு பிரதேச கலை வடிவங்களை நிகழ்த்தியவாறு யாழ்.நகர வீதிகளுடான ஊர்வலம் இடம் பெறவுள்ளது.

இறுதி நாள் நிகழ்வு நாளை வீரசிங்கம் மண்டபத்தில்,மன்றத்தின் இயக்குநரும் பேராசிரியருமாகிய நீ.மரியசேவியர் அடிகளின் தொடக்கவுரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

இம்மாநாட்டில் யோ.யோன்சன் ராஜ்குமார்,வைத்திய கலாநிதி எடவேட்,செல்வி வைதேகி வைகுந்தநாதன் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (உ-77,4,51)

# ஐ.தே.க. ஒழுக்க நெறிக்கோவை அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவர்களுக்கு ஒழுக்க நெறிக் கோவையை தயாரிப்பதற்கென நியமிக்கப்பட்டகுழு, அதன் இறுதி அறிக்கையை அடுத்தமாதம்2ஆம் திகதி கட்சியின் நிலையியற் குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

கட்சியின் ஒழுக்கநெறிக்கோவையை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு, தற்போது முக்கியமான அமைப்புக்களுடனும்,சங்கங்களுடனும் பேச்சுக்களை நடத்திவருகிறது. இக்குழுவில் மின்சக்தி எரிபொருள்த் துறை அமைச்சர் கருஜெயசூரிய, கட்சியின் தவிசாளர் மலிக்சமரவிக்கிரம, உபதலைவர் தயாகல்பொல, பொதுச் செயலாளர் செனத்கப்புக்கொட்டுவ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (தி)

# இளைஞர் படையணி அடுத்தமாதம் ஆரம்பம்

(கொழும்பு)

இளைஞர் படையணித் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர்காசிம் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்கள் தோறும் 250 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தொழிற்பயிற்சித் துறையின் மேம்பாட்டுக்காக அரசாங்கம் பல திட்டங்களை அமுல்படுத்தி உள்ளது எனவும் கபீர்காசிம் தெரிவித்துள்ளார். (தி)

# மினி சூறாவளி

(உடுவில்)

நேற்று முன்தினம் இரவு வீசிய மினி சூறாவளியினால் உடுவில் பகுதியில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

பனைமரங்கள் மற்றும் பயன்தரு மரங்கள் என்பன முறிந்து வீழ்ந்துள்ளதுடன் வீட்டுக் கூரைகளும் காற்றினால் தூக்கி வீசப்பட்டன.

இப்பகுதிக்கான மின்விநியோகமும் இக்கடுங் காற்றினால் தடைப்பட்டிருந்தது. (உ-261)

# பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடாத்துகின்ற அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மன்ற தேவாரப் பாடசாலை நல்லூர் ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் நடைபெறவுள்ளது. (உ)

# ஒரே இலக்கத்தில் நின்ற இரு 'ஹைஏஸ்' வான்கள் பொலிஸிடம் சிக்கின

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த ஒரே இலக்கம் கொண்ட இரு ஹைஏஸ் வான்கள் யாழ்ப்பாணத்தில்மோட்டார் போக்குவரத்துப்பொலிஸாரினால் நேற்று கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

59-9576 இலக்கம்கொண்ட வெள்ளை நிற ஹைஏஸ் வானும் நீல நிறம் கொண்ட ஹைஏஸ் வானுமே இவ்வாறு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்விரு வான்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான பயணிகள் சேவைகளை நடத்தி வருகின்றமை விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (உ-77,4)

# தீ மிதிப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி வீதி செல்வ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நாளை காலை வைகாசி விசாகத் தீ மிதிப்பு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அம்பாளுக்கு அபிஷேகமும், அம்பாள் வீதியுலாவும் இடம் பெறவுள்ளது. (உ)

# பட்டதாரிகள் வேலைவாய்ப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

வேலையற்ற 10ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும்நோக்குடன் இலங்கை வர்த்தக சம்மேளனங்களுடன் வேலைவாய்ப்பு அமைச்சு 4 ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனம், இலங்கை தேசிய சம்மேளனம்,இலங்கைத் தொழில் வர்த்தக சம்மேளனம் போன்றவற்றுடன் இவ்ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

தருண அருணத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்த ஒப்பந்தங்களுக்கு உலக வங்கி 100கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு ஒருவருட காலத்துக்கு விசேட கொடுப்பனவுகளுடனான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (தி)

# சமாதானச் சுற்றுலா

(கொழும்பு)

நியூ ஈஸ்வரன் பஸ் கொம்பனியின் கல்முனை டிப்போ ஊழியர்கள் வட பகுதிக்கான சமாதானச் சுற்றுலா ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளனர்.


பொலநறுவை,அனுராதபுரம், மன்னார்,யாழ்ப்பாணம்,வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இவர்களின் சமாதான சுற்றுலா இடம்பெறவுள்ளது.

இவர்களுடன் தென்பகுதிப் பத்திரிகையாளர்களும் பொது நல அமைப்புகளின் பிரதி நிதிகளும் இச்சுற்றுலாவில் பங்கேற்கவுள்ளனர். (தி)

## திருமறை கலாமன்ற சமாதான மாநாட்டு முதல் நாள் நிகழ்வின் போது



எழுச்சிக்கோலம்பூண்டுள்ள வீரசிங்கம் மண்டபம்




தொப்பி வியாபாரி எனும் சிங்கள நாடகத்தின் ஒரு காட்சி



நிகழ்வில் கலந்து கொண்ட தென்னிலங்கையர்




தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த வாகனங்கள்



கொட்டடி கற்குளம் ஸ்ரார் சனசமூகநிலையத்தில் இடம்பெற்ற இரண்டாவது இந்து மாநாட்டு எழுச்சி நிகழ்வில் கிராம அலுவலர்களான எஸ்.சுந்தரராஜன், எஸ். மகாலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும், சைவப்புலவர் கந்தசத்தியதாசன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் படத்தில் காணலாம்.



இணுவில் இளந்தொண்டர் சபையினால் நடத்தப்பட்ட இந்து கலாசார நிகழ்விற்கு அமைச்சர் மகேஸ்வரன் அழைத்துச் செல்லப்படுகிறார். படம்: விமல்

# சார்ஸ் நோய்ப் பரிசோதனை!

# வெளிநாட்டு வைத்திய நிபுணர்களை குடாநாடு அழைத்து வர ஏற்பாடு

## யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் சதுர்முகன் தகவல்.

(யாழ்ப்பாணம்)

**சார்ஸ் நோய்க்குரிய குணங்குறிகளில் ஏதாவது ஒன்று தானும் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகன் யாழ். குடாநாட்டு மக்களிடம் அவசர கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளார்.**

சார்ஸ் நோயாளி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமாகி இருப்பதாக வெளியான செய்திகள் தொடர்பில் தற்போது குடாநாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மரண பயம் கலந்த பரபரப்பான சூழ்நிலையில் மக்களுக்கு மேற்படி கோரிக்கையை விடுத்துள்ள பணிப்பாளர் மேலும் கூறுகையில்,

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமான இளம் பெண் சார்ஸ் நோயாளிதான் என்பது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

அத்துடன் இந்நோய் ஏற்படுவதற்கான ஏதுக்களும் மிகக் குறைவாகவே இப்பெண் மீது அவதானிக்கப்பட்டுள்ளன.

இப்பெண் ஒருவகை சளி சுரத்தினால் பாதிக்கப்பட்டிருந்தமை மாத்திரமே தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தவிரவும், மரணமான பெண்ணின் இரத்த மாதிரி மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களில் அந்த அறிக்கை கைவந்து சேர்ந்ததும் திடமான முடிவுகளை கூற முடியும் என்று குறிப்பிட்டார்.

மேலும் கூறுகையில், சார்ஸ் பீதி காரணமாக வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலையை நாடுவதில் எவரும் தயக்கம் அடையவேண்டியதில்லை.

இங்கு இவ்வாறான குணம் குறிகளுடன் வருபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவர். இவர்களுக்காக தனியான விடுதியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஓரளவிற்கு வேண்டிய பாதுகாப்பு முகக் கவசங்கள் கையிருப்பில் உள்ளன. இன்னும் தேவையானவற்றை வரவழைக்கவுள்ளோம்.

சளி, காய்ச்சல், மூச்செடுப்பதில் சிரமம், உடம்பு நோவு என்பன காணப்படுமிடத்து உடன் வைத்தியசாலையை நாடுவது வீண் உயிராபத்துக்களை தவிர்க்க உதவும்.

இதேவேளை, சார்ஸ் சோதனைகளை மேற்கொள்ள வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை வரவழைக்க துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இது விடயத்தில் மக்கள் அனாவசிய அச்சங்களைத் தவிர்க்க வேண்டும் என்றார். (உ-7)

### 200 முகக் கவசங்களை மேலும் பெறுவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் கூடிய ஒருவர் குடாநாட்டில் இனங்காணப்பட்டு அவர் யாழ். போதனாவைத்தியசாலையில் மரணமடைந்திருப்பதை தொடர்ந்து நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் அங்கு துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவசர அவசரமாக 30 முகக்கவசங்கள் கொழும்பில் இருந்து விமான மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும், 200 முகக்கவசங்களை எடுத்துவருவதற்கான உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மேற்படி முகக்கவசங்களை அணிந்தவாறு வைத்தியசாலைப் பணியாளர்கள் சிலர் நேற்று பணி புரிந்தமையை அவதானிக்க முடிந்தது. (உ-4)

### யாழ். ஆஸ்பத்திரியில் சார்ஸ் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் காணப்பட்ட ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமடைந்திருப்பதை அடுத்து நேற்று அங்கு வேறு நோய்களுக்குச் சிகிச்சை பெற வந்திருப்பவர்கள் மத்தியில் ஒருவித பரபரப்பை காணக்கூடியதாக இருந்தது.

மேற்படி நோய் தம்மையும் பீடிக்கக்கூடுமோ என்ற அச்சம் அவர்களிடம் ஏற்பட்டிருப்பதை அவர்களிடம் பேச்சுக் கொடுத்தபோது உணர முடிந்தது.

தவிரவும், அவர்கள் தாமதமின்றி தமது அலுவலை முடித்துக் கொண்டு வெளியேற வேண்டும் என்பதில் ஆவலாய் இருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் தங்கிச் சிகிச்சை பெற்ற பலரும் வீடு செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை பணியாளர்களிடையேயும் மேற்படி சார்ஸ் பீதி ஒருவித கலக்கத்தை ஏற்படுத்திஉள்ளது.

உலக சுகாதார நிறுவனப் கணிப்பின் படி சார்ஸ் நோய்க் காவிகளாக வைத்தியசாலைகளின் பணியாளர்களும் இனங் காணப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4)

## திட்டமிட்டவாறு வன்னியில் சந்திப்புக்கள் இடம்பெறும்

### லண்டன் செல்லுமுன் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நான் வன்னியில் இல்லாத போதிலும் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக திட்டமிட்ட சந்திப்புக்கள் உள்ளிட்ட சகல விடயங்களும் இடம்பெறும் என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக திங்களன்று லண்டன் பயணமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டன் செல்லுமுன்னர் கொழும்பில் வைத்து வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை தற்காலிகமாக இடை நிறுத்தியிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் யுத்தத்தில் எந்தக் காரணம் கொண்டும் ஈடுபடாது என்றும், கொழும்பு வரவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர் சன்னுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் இடையிலான சந்திப்பும் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் பாலா மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)



### விரிவுரை

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பாட விரிவுரைகள் எதிர்வரும் 17,18ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் என பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ-54)

### குருபூசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்பட்டு வருகின்ற 63 நாயன்மார் குருபூசை வரிசையில் வைகாசி மூலத் தினமான எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருஞான சம்பந்தர், திருநீல நக்கர், முருகர், திருநீலகண்டர். யாழ்ப்பாணர் ஆகியோரது குருபூசைகள்- கல்லூரியிலுள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (உ)

### இணை ஓட்டத்தில் இலங்கையர் சாதனை

(கொழும்பு)

இலங்கை அணியின் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்போட்டியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரமேஸ் களுவிதாரண மற்றும் சனத் ஜெயசூரிய ஆகியோரின் இணை ஓட்டம் மூவாயிரமாக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் தம்புள்ளயில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் அவர்கள் இச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். (ந-5)

### பொதுமக்கள் பிடித்தனர்

(சுன்னாகம்)

சுன்னாகம் சந்தையின் பின்புற வீதியில் துர்நடத்தையில் ஈடுபட முயன்ற இருவரை பொதுமக்கள் பிடித்து சுன்னாகம் அரசியல் துறையில் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம் பெற்றது. (ந-87,95)


தரம் 09 மாணவர்களுக்கான

**கட்டுரைப் போட்டி**

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது''

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் :------------------------------------------
பாடசாலை :------------------------------------------
:------------------------------------------
கற்கும் தரம் :-------------------

உறுதிப்படுத்துகிறேன்

-------------------------
ஆசிரியர்


## ஆஸ்பத்திரியில் தங்கிச் சிகிச்சை பெறுவோரைப் பார்க்க வருவோர் வெகுவாகக் குறைவு

(யாழ்ப்பாணம்)

சார்ஸ் நோய் குறித்த பய உணர்வு குடாநாட்டு மக்களை தொற்றிக் கொண்டதை அடுத்து நேற்று விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களைப் பார்வையிடுவோர் தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்திருந்தது.

வழமையில், நோயாளரைப் பார்வையிட அனுமதிக்கும் காலை, மதியம், மாலை வேளைகளில் இடித்து விலக முடியாத மக்கள் கூட்டம் காணப்படுவது வழமை. ஆனாலும் நேற்று மிகச் சொற்பமானவர்களே நோயாளர்களான தமது உறவினர்களைப் பார்வையிட்டுச் சென்றனர். (உ-4)

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதில் இந்தியா தீவிரம்

(புதுடில்லி)

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இலங்கை அகதிகளை சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய உள்துறை அமைச்சின் அதிகாரியான ஆர்.கே.சர்மா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மண்டபம் அகதிமுகாம்களில் வாழும் இலங்கை அகதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக அந்நாட்டு அரசோடும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ளார். (உ-8)

## உளப் பாதிப்புக்குள்ளான சிறார் மேம்பாட்டுத் திட்டம் வடகிழக்கில் நடைமுறை

(சுதுமலை)

கடந்த கால போர் சூழ்நிலை காரணமாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உளப் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு புதிய பல மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

இதன் முதல் கட்டமாக, மத்திய கல்வி அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றின் பணிப்புக்கமைய வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள 800 ஆசிரியர்களுக்கு இது தொடர்பான பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிகளை வழங்குவதற்கு யாழ். கச்சேரியடியில் உள்ள சாந்திகம் உளவள நிலையத்திலிருந்து 30ற்கும் மேற்பட்ட உளவளத்துறை பயிற்றுநர்கள் திருமலைக்குச் சென்றுள்ளதாக சாந்திக திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-252)

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்.
– குறள்

வலம்புரி

## சார்ஸ் அபாயம்

பல நாடுகளை உலுப்பிக் கொணடிருந்த சார்ஸ் இப்போது யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டுள்ளதாக ஊகிக்கப்படுகிறது.யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் யுவதி ஒருவரில் சார்ஸ் நோய்க்கான அறிகுறிகள் இருந்ததையடுத்தே யாழ்ப்பாணத்திலும் சார்ஸ் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

ஒரு வகையான வைரசினால் ஏற்படும் இச் சார்ஸ் நோய் சீனாவிலேயே முதலில் தோனறியதாகமருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சார்ஸ் நோய் ஒருவருக்கு ஏற்பட்டால் அதன் விளைவு மரணம் என்பதல்ல.சார்ஸ் நோய் ஏற்பட்ட எத்தனையோ நோயாளர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் ‘‘சார்ஸ்’’ நோய் ஏற்படலாம் என்ற அச்சம் அறவே ஏற்படாததனால் அது தொடர்பான முன் ஆயத்தங்களை யாழ்போதனா வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டிருக்கவில்லை.

இதன் காரணமாக சார்ஸ் நோய் என ஊகங்களின் அடிப்படையில் இனம் காணப்பட்ட யுவதி போதிய கண்காணிப்பும்,சிகிச்சையும் கிடைக்காத நிலையில் உயிரிழக்க நேரிட்டது.குறித்த நோயாளிக்கு சார்ஸ் நோய் அறிகுறி இருப்பதென்ற ஊகத்தோடு அவருக்கான சிகிச்சையை வழங்க டாக்டர்கள் அச்சமடைந்த நிலையில்,பிரஸ்தாப நோயாளி மரணித்துள்ளார். இங்கு குறித்த நோயாளி சார்ஸ் நோய்க்கு ஆளானவரா என்ற பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு அது உறுதிப்படுத்தப்படும் போதே டாக்டர்களின் அச்சம் நியாயமானதாகக் கருதப்படும். மாறாக பிரஸ்தாப யுவதிக்கு சார்ஸ் நோயல்ல என்ற முடிவுகள் கிடைக்குமாயின்,அது யாழ்.போதனா வைத்திய சாலையில் தற்செயலாக இடம் பெற்ற ஓர் கொலையாகவே கருதப்படும்.இத்தகையதோர் இக்கட்டான சூழ்நிலை,சார்ஸ் என்ற நோயின் தாக்கம் யாழ்ப்பாணத்திலும் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பில் தடுப்புக்கும், சிகிச்சைக்குமான முன்னேற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தால்,ஏற்பட்டிராதென்பது பொதுவான கருத்தாகும்.

எதுவாயினும் சார்ஸ் என்ற நோயின் அறிகுறிகள் இனம் காணப்பட்டதும்,அவ்வாறு இனம் காணப்பட்ட நபர் மரணித்துப் போனதும் நடந்து முடிந்துள்ளதால், சார்ஸ் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது மிக மிக அவசியமாகும்.

இவ் விழிப்புணர்வு மக்களை அச்சம் கொள்ள வைப்பதாக இல்லாமல் வருகின்ற சார்ஸை எதிர் கொள்ளத் தயாராக்குவதாக இருக்க வேண்டும். இது விடயத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்,சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள்,வெளிக்கள சுகாதார உத்தியோகத்தர்கள்,பொது அமைப்புக்கள் எனப் பல தரப்பினரும் தியாக சிந்தையோடு கூடிய தமது சேவையை வழங்க முன் வரவேண்டும் இதுவே இன்றைய உடனடித் தேவையாகும்.

# குமுதினிப் படகில் வந்த பயணிகள் ஆழ்கடலில் குத்திக் குதறப்பட்டனர்

**அவல நிகழ்வின் நினைவு தினம் இன்று**

15.5.1985 அன்று கடல் கூடக்கண் விழித்திராத காலைப் பொழுது. நெடுந்தீவின் கடற்கரையில் ஏறக்குறைய 70 வரையான பயணிகளுடன் குறிகட்டுவான் செல்வதற்காய் ஆயத்தமாய் காத்திருந்தது. குமுதினிப்படகு காலை 7.40 அளவில் கடலில் தன் பயணத்தை ஆரம்பித்தது அந்தக் கடல் பறவை.

அலைகளின் மத்தியில் அரை மணித்தியாலங்களை அமைதியாய் கழித்த பின்னரே அந்த கோரச் சம்பவம் நிகழ்ந்தது. நெடுந்தீவிற்கும் நயினாதீவிற்கும் இடையே அமைதியைக் குலைதது அலையைக் கிழித்தபடி வந்த பிளாஸ்ரிக் படகினால் வழி மறித்து நிறுத்தப்பட்டது குமுதினிப்படகு.

### பிளாஸ்ரிக் படகில் வந்தவர்கள்

படகு நிறுத்தப்பட்டவுடன பிளாஸ்ரிக படகில்வந்த அனைவரும் சர்வாதிகாரத்துடன் குமுதினிப்படகில் ஏறிக் கொண்டனர். குமுதினிப்படகில் இருந்த அனைவரையும் முன்னறைக்குச் செல்லுமாறு கட்டளையிட்டனர். தமக்கு நிகழவிருக்கும் பயங்கரத்தை உணர்ந்தும், உணராத மக்கள் அச்சத்துடன் முன்அறைக்குச் சென்றனர். அவர்களிடம் பெயர், விலாசம், தொழில், இடம் என்பவற்றை சத்தமாகக்கூறும்படி கட்டளையிட்டனர் அந்தக்கயவர்கள்.

அறைவாசலில் இருவர் காவல்நிற்க, ஆண்களை ஒருவர் பின் ஒருவராக அறைக்குள் வரும்படி கட்டளை



படம்: த.மதியழகன்

யிட்டனர். அதேநேரம் ஏனையவர்களை தங்கள் பெயர்களை சத்தமாகக்கூறும்படியும் கூறினர். அடையாள அட்டையைத் தாங்கியவாறு வந்த பயணிகளைப் பகுதிபகுதியாகப் பிரித்துவிட்டுக் கண்டபடிதாக்கினர்.

### அப்பாவிகள் கொல்லப்பட்டனர்

துப்பாக்கிகளை வைத்துவிட்டு கத்தி கோடாரி போன்ற ஆயுதங்களால் கடுமையாகத் தாக்கப் பட்டனர். அவர்களின் அலறல் சத்தம் ஆழ்கடலையும் அழவைக்கும் வண்ணம் இருந்தது. இத்தாக்குதலில் 32 அப்பாவிகள் கொல்லப்பட்டனர். இதில் 3வயதுப்பெண் குழந்தையும் அடங்கியதைக் கேட்டவர் கண்களும், இதயமும் ஒன்றாகக் கலங்கின. 30பேர் படுகாயமடைந்த தனர்.மேலும் பலர் படுகாயமடைந்த நிலையில் கடலில் தூக்கியெறியப் பட்டனர்.

தாக்குதல் நாடகத்தை அரங்கேற்றி முடித்ததும் தாக்கியோர் பிளாஸ்ரிக் படகில் ஏறிச்சென்று விட்டனர்.

### புங்குடுதீவிற்குச் சடலங்கள்

இறந்தவர்களையும் தாங்கிய படகு கூட்டுறவுச்சங்கத்தைச்சேர்ந்த ஒரு இயந்திரப்படகினால் இழுத்துச் செல்லப்பட்டு நயினாதீவுக் கடற்கரையிலிருந்த கடற்படையினரிடம் அனுமதி பெற்று மீண்டும் புங்குடுதீவுக் குறிகாட்டுவானுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இறந்த 32பேரின சடலங்கள் புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்கும், படுகாயமடைந்த 30பேர் யாழ். ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டனர். இச்சம்பவத்தைக் கேள்வியுற்றதும் யாழ். ஆஸ்பத்திரிக்குள்ளும் வெளியிலும் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. காயமுற்றோரில் அதிகமானோருக்கு தலை, மற்றும், அபாயகரமான இடங்களிலும்,காயங்கள் காணப்பட்டன.அவர்களைப் பார்க்க வந்திருந்தோரில் பலர் அனுதாபத்துடன் இரத்ததானம் செய்தனர். இலங்கைத் தமிழர் வாழ்வின் அவலங்கள் எப்போது தான் நீங்குமோ?

### காசோலை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் கடந்த 9-ம் திகதி வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் வைத்து வழங்கப்பட்ட காசோலைகளை பெறத்தவறிய இந்து நிறுவனங்கள்,பாடசாலைகள் மற்றும் இந்து ஆலயங்கள் என்பன தமக்குரிய காசோலைகளை நாளை காலை 10.30மணிக்கு நல்லூர் மணி மண்டபத்தில் உரிய ஆவணங்களுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு கேட்டுள்ளது. (ந-5)

### அருள் நூல் வெளியீடு

(மருதங்கேணி)

வல்வெட்டி கவிஞர் ஆ.கதிர்காம தம்பியின் ‘திருவிளையாடல் பூசை பாமலர்கள்’அருள் நூலின் வெளியீட்டு விழா தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழவில் வாழ்த்துரையை அமைச்சர் தி.மகேஸ்வரனும் வெளியீட்டுரையை அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவரும் மதிப்புரையை சைவப் புலவர் சு.செல்லத்துரையும் மதிப் பீட்டுரையை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் வழங்கவுள்ளனர்.(உ-35)

# முஸ்லிம் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றவர் ரத்வத்தவின் புத்திரரே

## நேரில் கண்டவர் சாட்சியம்

(கொழும்பு)

வெள்ளை வானுக்குள் இருந்த முஸ்லிம் இளைஞர்களை சுட்டுக் கொன்றவர் சானுக ரத்வத்தை தான்.

உடத்தலவின்ன படுகொலைகள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம் பெற்ற போது சாட்சியமளித்த முகமட்மாலிக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மாலிக் தொடர்ந்தும் சாட்சியமளிக்கையில்,

2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது ஜம்டு அஸ்வர் வித்தியாலயத்தில் அமைந்திருந்த வாக்குச்சாவடி நிலையத்திலிருந்து வாக்குப் பெட்டிகளை கூட்டுக்குள் கொண்டு செல்ல ஆயத்தமாகும் பொழுது வாக்குப்பெட்டிக்குள் பெயின்டை தெளிக்க சதி நடைபெறுகிறது என்ற செய்தியொன்று கிடைத்தது.

எனவே வாக்குப் பெட்டிகள் கொண்டு சென்ற பஸ்வண்டியை பின் தொடர்ந்து வெள்ளை வானொன்றில் சென்றோம்.

3 டிபென்டர் வாகனங்களில் எங்களைப் பின் தொடர்ந்து 8பேர் வந்தனர். நாங்கள் குறுக்குப்பாதையால் செல்லமுயன்றோம். அவர்கள எம்மைப் பின் தொடர்ந்து எமது வானைச் சுற்றிவளைத்தனர்.

அதிலிருந்து இறங்கிய சானுகரத்வத்தை வானுக்குள் இருந்தவர்களை ஒவ்வொருவராக சுட்டுத்தள்ளினார். எனது தலையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது.

சுடப்பட்டவர்கள் இறந்துவிட்டார்களா என்று பார்க்கமீண்டும் வானுக்குள் வந்து சுட்டார். நான் இறந்ததுபோல் கிடந்தேன். என் கையில் வெடிகுண்டை திணித்துவிட்டு இறங்கிச்சென்றனர்.8பேரும் இராணுவ சீருடையில் இருந்தனர் எனக் கூறினார். (உ)

### 67 வீடமைப்புத்திட்டம் போக்கறுப்பில் அமுல்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராமசேவகர்பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 67 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஜி.ரி. சற் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

கேவில்,போக்கறுப்பு, வண்ணான குளம் ஆகிய கிராமங்களிலுள்ள மீளக்குடியமர்ந்த மக்களுக்கே இவ் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இபபயனாளிகளை தெரிவு செய்யும் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை போக்கறுப்பு கிராம சேவகர் அலுவலகத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-35)

### தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் திறப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர்ப் பிரதேசத்திலுள்ள கட்டைபறிச்சானில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிமனை ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

அண்மையில் மூதூரில் இடம் பெற்ற அனர்த்தங்களில் பலியான மூவரின் குடும்பங்களுக்கு இப்பணிமனையூடாக உதவித் தொகையாக தலா5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (உ-8)

## துணைவிக் கிராமத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டம்

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் உள்ள மிகவும் பின்தங்கியதாக இனம் காணப்பட்ட துணைவி கிராமத்தில் அடுத்த வருடத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக கிராம மட்டத்தில் கடமை புரியும உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று கடந்த திங்கட் கிழமை வட்டுக்கோட்டையில் நடைபெற்றது.

20இலட்சம் ரூபா செலவில் இக் கிராமம் மாதிரிக் கிராமமாக்கப்பட்டு 100வீட்டுத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.அத்துடன்,பொதுக்கிணறுகள் திருத்தம்,புதிய நீர்அடைப்பு மலசலகூடங்கள நிர்மாணம் போன்ற அபிவிருத்திப்பணிகளும் இப்பகுதயில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

தவிரவும் சிறுவர்போஷாக்குத் திட்டமும் இப்பகுதியில் அமுல்படுத்தப் படவுள்ளது. (உ-252)



**சாயி அருளமுதம்**

எல்லா வயதினரும் ஆரோக்கியத்திலும்,செலவத்திலும, எல்லா நிலைகளிலுள்ளவர்களும்; கல்வியிலும் புத்தியிலும் பல்வேறு மட்டங்களிலுள்ளவர்களும் பிரசாந்தி நிலையத்துக்கு வருகை தருகின்றனர் செல்வதற்கு வேறு இடம் இல்லாதவர்களுக்கும் இந்தப் பிரசாந்தி நிலையம் ஒரு புகலிடமாக விளங்குகிறது ஒருவரையும் அந்நியராகக் கருதவேண்டாம் எல்லோரும் என்னையே பாதுகாவனாகவும் ஆதாரமாகவும் கொண்டுள்ளனர் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள் ஒருவருக்கு எதிராகவோ அல்லது ஒருவருடைய முன்னிலையிலோ கோபம்,வன்மம், பொறாமை அல்லது கர்வம் கொள்ள வோண்டாம் பூரணமான பணிவுடன் பழகுங்கள் மனித நேயத்தில் நம்பிக்கை வையுங்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

### அன்னை நெடுந்தீவு புலம்பல்

அன்னை நெடுந்தீவென நான் அழைக்கப்பெற்றேன்
ஆனிரைகள் தம்மினையான் ஈந்ததாலே
இப்புவியில் பசுத்தீவாய் ஏற்றம்கண்டேன்
ஈகை நெடு விருந்தோம்பல்இவைகள் செய்ய
உன்னதமாம் உழவர்களை உவந்தழித்து
ஊக்குவித்தேன் தமிழ் மண்ணின்உணவுக்காக
எண்ணரிய துறைமுகங்கள்என்னகத்தே
ஏற்றுவேன் பால்,பழம்,பு, ஈசற்காக
ஒருபொழுதும் அவலமில்லா ஓடம் தந்த
ஓட்டிகளை நான் கண்டேன் உலகுக்காக
இ∴. து வரை எனதருமைமைந்தர்க்கீண்டு
இடர் எதுவும் நடைபெற்றதில்லை இந்த
சிங்களத்தின் கொடிய படை சீற்றம் கொண்டு
சிறியவர்கள்,பெரியவர்கள் பேதமின்றி
கொன்றொழித்தார் ஐயகோநாய்கள்போல குதறினரே
வென்றிடற்கு தமிழ் மண்ணை தாயே அம்மா
வீரமிகு மைந்தர்களை தோற்றுவித்து தந்திடுவேன் ஆனாலும்
கண்ணீர் ஆறோ காலமுள்ள வரையினிலும் வற்றாதம்மா

நெடுந்தீவு மக்கள்

# ஈராக் தலை நகரில் மனிதப் புதை குழி

## 4 ஆயிரம் சடலங்கள் மீட்பு

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் ஆயிரக் கணக்கான ஈராக்கியர்கள் கொல்லப்பட்ட பின் புதைக்கப்பட்டிருந்தமை நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப் புதைகுழிகளைக் கண்டுபிடித்த அமெரிக்க காலாற் படையினர் இது வரை 4 ஆயிரம் சடலங்களை மீட்டுள்ளனர். மீட்கப்பட்டுள்ள சடலங்களுடன் இருந்த அடையாள அட்டைகளின் துணை கொண்டு சடலங்கள் சில அடையாளம் காணப்பட்டு அவை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சதாம் ஹுசேனின் ஆட்சியின் போது,அவருக்கு எதிராகப் புரட்சி செய்தவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,சடலங்கள் தோண்டி எடுக்கப்படுவது தொடர்ந்து நடைபெறுவதாகவும்.இப்புதை குழிகளுக்குள் சுமார் 10 ஆயிரம் ஈராக்கியர்கள் புதைக்கப் பட்டிருக்கலாம் என்றும் அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# ஜனாதிபதி நிதி கிடைக்கவில்லை

## மகாபொல கொடுப்பதில் சிக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியில் இருந்து மகாபொல புலமைப் பரிசில் நிதியத்திற்கு சுமார் 100 கோடி ரூபா நிதிகிடைக்க வேண்டியிருப்பதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வர்த்தக நுகர்வோர் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், இந்நிதி கிடைக்காததன் காரணமாக மகாபொல புலமைப் பரிசில் நிதியம் பல்வேறு சிக்கல்களுக்கு உட்பட்டுள்ளது.

இவ்வருடம் பல்கலைக் கழகங்களுக்கு இரு கல்வி ஆண்டு மாணவர்களை ஒன்றாக அனுமதிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கு வேண்டிய புலமைப்பரிசில் நிதிக்காக 140 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தி)

# குடாநாட்டில் வீசிய காற்றால் பலத்த சேதம் ஏற்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் பல பயனுள்ள மரங்கள் வீழ்ந்துள்ளதுடன் பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நின்ற பெரிய மரமும் மின்கம்பங்களும் சரிந்து வீழ்ந்துள்ளன.இதனால் சில மணி நேரம் பஸ் சேவை பாதிக்கப்பட்டிருந்தது.இதே போல் போதனா வைத்தியசாலையில் மக்கள் இளைப்பாறிச் செல்வதற்காக போடப்பட்டிருந்த கொட்டகையும் வீழ்ந்துள்ளது. இங்குள்ள வீடொன்றின் முன்னால் நின்ற வேப்ப மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் வீடொன்று முற்றாக சேதமடைந்தது என்றும் வீட்டினுள் உறங்கிக்கொண்டிருந்த 8பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இதேவேளை,வேலணையில் வெசாக் தினத்திற்காக கடற்படையினரால் கட்டப்பட்டிருந்த வெசாக் கூடுகள் காற்றினால் சேதமாகியது.

காரை நகரில் வீசிய கடும்காற்றினால் 300க்கும் மேற்பட்ட பனை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் 50 மேற்பட்ட பயன்தரு மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளன. 13 வீடுகளின் ஓடுகள் முற்றாக தூக்கி எறியப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

காரைநகர் நீலங்காட்டுப் பகுதியில் உள்ள 100 வீட்டுத்திட்டத்தில் 3 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதனைவிட அராலி,வடமாராட்சி, தென்மராட்சி,ஐந்துசந்தி, ஒட்டுமடம்,நல்லூர் ஆகிய இடங்களில் சில வீடுகள் சேதமாகியுள்ளதுடன் பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. (ந-7,74,246)

### யாழ்ப்பாணத்தில்...

டாக்டர் பேரானந்தராசா பிரஸ்தாப நோயாளியின் மரணத்துக்கான காரணங்களை விளக்கினார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி சடலத்தைப் பாதுகாப்பான முறையில் சீல் வைத்து சுகாதாரப் பரிசோதகரின் மேற்பார்வையின் கீழ் அடக்கம் செய்யுமாறும், அடக்கம் செய்யும் நிகழ்வில் குடும்ப உறுப்பினர்கள் ஒரு சிலரை மாத்திரம் கலந்துகொள்ளுமாறும் பணித்தார்.

இதன்படி நேற்று இரவு 9.30மணியளவில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை மரணமடைந்த யுவதியின் வீட்டை சுகாதாரப் பரிசோதகர் சீல் வைத்து மூடியதுடன் வெளி விறாந்தையை மட்டும் பாவிப்பதற்கு அனுமதியளித்தார். சார்ஸ் நோய் காரணமாகவே யுவதி மரணமடைந்திருந்தால், சார்ஸ் நோய் ஏனையோருக்கும் தொற்றிக் கொள்ளாது தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகவே சுகாதாரப் பரிசோதகர் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டார்.

இதேவேளை பிரஸ்தாப யுவதி சார்ஸ் நோய் காரணமாகவே உயிரிழந்தார் என்பது இதுவரையும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் மரண வீட்டிற்கு வாடகைக் கதிரைகளை வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-7)

### இரத்த...

போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது.

இன்று காலை அம்புலன்ஸ் வண்டி மூலம் அவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

### தேர்தலை...

ஒன்றுக்கு தேர்தல் திணைக்களம் தயாராக இருக்கிறதா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது தேர்தல் ஒன்று வருமானால் அதனை எதிர்கொள்ளத் தேர்தல் திணைக்களம் தயாராக இருக்கின்றதென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.(வ)

## சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜங்கரன் கம்ஷா (வயது 5) நேற்று மரணம் அடைந்தார்.சார்ஸ் நோய்யென இனம் காணப்பட்ட நோயளி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அங்கு இச் சிறுமியும் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று அதிகாலை இச் சிறுமி மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந)

## ஈ.பி.டி.பியின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகங்களின் பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஈ.பி.டி.பி அலுவலகத்தின் பாதுகாப்பையும் பலப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு ஈ.பி.டி.பி எம்.பிக்களுக்கான பாதுகாப்பையும் அதிகரித்துள்ளது. (ம)

## களுத்துறைக் கைதிகள் உண்ணா விரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் நீண்ட நாட்களாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மூன்று தமிழ அரசியல் கைதிகள் நேற்றுக் காலை முதல் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

தம்மை நிபந்தனை இன்றி விடுதலை செய்யவேண்டும், நீதிமனறில் நிறுத்தக்கூடாது என்ற கோரிக்கைகளின் அடிப்படையிலே சிறைச்சாலைக் கடைக் கூரையின் மேல்ஏறி இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

பிரதம நீதியரசரும், சட்டமா அதிபரும் தமது நிலமையை நேரில் வந்து பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

### வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தக் கோரி

# யாழ் . செயலகம் முன்பாக 20ந் திகதி மறியல் போர்

(ஏழாலை)

வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர்த்துமாறு கோரி எதிர் வரும் 20-ந் திகதி செவ்வாய்க் கிழமை யாழ் செயலகம் முன்பாக வலி வடகக்கு மக்கள் மாபெரும் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நேற்றுத் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற வலிகாமம் வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத தலைவர் சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் என நூற்றிற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (த-12,8)

# நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் கூட்டம்

## யாழ்.ஐந்து சந்தியில் இன்று

(யாழ்ப்பாணம்)

முகம்மது நபி(ஸல்)யின் பிறந்த நாள் ஞாபகார்த்தப் பொதுக கூட்டம் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் இன்று பிற்பகல் 7.00 மணிக்கு யாழ்.பேஷ் இமாம் புதுப்பள்ளி வாசல் மௌலவி எ.ஜி.எம் இர்பான் தலைமையில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வுக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் கௌரவ விருந்தினராகவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை நல்லை ஆதன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,வணபிதா ஜெபரட்ணம் ஜெபமோகன் அடிகளார் யாழ்.மாவட்ட நீதிபதி ரி.விக்னராஜா யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் பேராசியர் என்.ஞானக்குமரன் யாழ்.மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் யாழ்.மஸ்றடத்தீன் பாடசாலை முன்னாள் அதிபர் அல்ஹாஜ எம்.எஸ். எம்.ஷிஹாப்தீன் யாழ்பல் கலைக் கழக கலைப்பீட மாணவி செல்வி பாத்திமாறிபானா மூசீன் மற்றும் மௌலவி எ.மனாபுதீன் அல்ஹாஜ் மௌலவி எம்.எம்.நாகில் ஆகியோரும் சிறப்புரை வழங்கவுள்ளனர்

இதனைத்தொடர்ந்து சமயக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படும். (ந-5)

## வெசாக்தினத்தில் பொது மன்னிப்பு

(கொழும்பு)

வெசாக்தினத்தை முன்னிட்டு அதிகளவு கைதிகளிற்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார் இப் பொது மன்னிப்பின் மூலம் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளின் தண்டனைக்காலம் ஒரு வருடத்திற்கு ஒரு வாரத்தால் குறைக்கப்படுகிறது.

தண்டப் பணத்தை செலுத்த முடியாமலும் சிறிய குற்றச்சாட்டுக்களிற்காகவும் சிறையில் அடைக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படுவார்களென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

எனினும் திருட்டு,தேசத்துரோகம்,கடத்தல்,சிறுவர் துஷபிரயோகம், பாலியல் வல்லுறவு, போதைப்பொருள கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடயவர்களுக்கு இந்தப் பொது மன்னிப்பு செல்லுபடியாகாது எனவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துளளது. (ந-5)

## படகு கவிழ்ந்து நால்வர் பலி

(கொழும்பு)

வாதுவையில் விக்கல நதியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர் டாக்டர் எனறும் இன்னொருவர் பாணந்துறை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் சடலங்கள் பாணந்துறை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-5)

### லொத்தர்...

மீள் பரிசீலனை செய்யத் தேவையில்லை எனவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி தனது முடிவு வர்த்தமானியில் வெளியிடப்படாவிட்டாலும் அது செல்லுபடியாகும் என்று தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கிடைக்கும் நிதியை ஜனாதிபதிக்கு அனுப்பாமல் அதனை திசை திருப்ப அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மிலிந்த மொறகொட ஆகியோர் முயன்றதாக அக் கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி இது தொடர்பாக அவர்கள் அமைச்சரவைக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் திரண்ட நிதியை ஜனாதிபதியின் நிதிக்கு அனுப்பிவைக்கப்படாமல் இருப்பது தொடர்பான ஆலோசனையை சட்டமா அதிபரிடம் இந்த அமைச்சர்கள் கோரியதாகவும் சட்டமா அதிபர் இது குறித்து மூன்று தீர்ப்புக்களை வழங்கியதாகவும் அமைச்சர்களின் இத்தகைய செயல்களை பிரதமர் அறிந்து வைத்திருந்ததாகவும் ஜனாதிபதி சந்திரிகா அக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (ம)


**இளம் ஓவியக் கலைஞர்களே!**

**உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்**

**வலம்புரி சங்கு நாதம்**

**தினசரியிலும் வாரமலரிலும்**

உங்கள் ஓவியங்கள் இடம்பெற மகத்தான சந்தர்ப்பம். இன்றே வலம்புரி — சங்குநாதத்தின் ஓவியக் கலையகத்தில் உங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். வலம்புரியில் தினசரி வெளியாகவிருக்கும் காட்டூனில் உங்கள் கற்பனைத் திறனும் இடம்பெற இன்றே உங்கள் விண்ணப்பங்களை:

"ஓவியக் கலையகம்"
வலம்புரி - சங்குநாதம்
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சமகால பிரச்சினைகளைச் சித்தரிக்கும் உங்கள் காட்டூன்களை உடனடியாக வலம்புரிக்கு அனுப்புங்கள்.



**YOGI BEAUTY PARLOUR**

LADIES HERBAL BEAUTY CARE $ FITTNESS CENTER
(Academy Of Beauty Culture And Hair Dressing)

குறுகிய கால புதிய Diploma பயிற்சி வகுப்புக்கள்
19-05-2003 முதல் ஆரம்பமாக உள்ளது

¶ அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture $Therapy)

¶ முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும். (Make - Up And Hair Dressing)

இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சியளிக்கப்படும். சேரவிரும்பும் மாணவிகள் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட்
நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

☎ 2222796

(7042)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.